# சமூக அறிவியலில் சாதனை மதிப்பெண் பெற

சமூக அறிவியல் பாடத்தில் 100 மதிப்பெண்கள் எடுக்க முடியாது என்று பலரும் நினைக்கிறார்கள். அதேநேரம் அலட்சியத்தால் பலரும் தேர்ச்சி பெறத்தவறுவதும் சமூக அறிவியலில்தான். இரண்டு மூடநம்பிக்கைகளையும் களைந்துவிட்டுப் படித்தால் 100 மதிப்பெண் பெறுவதும், எளிதில் தேர்ச்சி பெறுவதும் சாத்தியம் அது எப்படி?

பத்தாம் வகுப்பு சமூக அறிவியல் பாடத்தில் அதிக மதிப்பெண்கள் பெறவும், தேர்ச்சி பெறவும் வழிகாட்டுகிறார் **கிருஷ்ணகிரி மாவட்டம் கங்கலேரி அரசு உயர்நிலைப் பள்ளி வரலாற்று ஆசிரியர் பே.சீனிவாசன்.**

## ஒரு மதிப்பெண்

முதல் 14 வினாக்களில் வரலாறு-4, குடிமையியல்-3, புவியியல்-4, பொருளியியல்-3 பகுதிகளில் இருந்து கேட்கப்படும். அனைத்து வினாக்களும் புத்தகத்தில் உள்ள பயிற்சி வினாக்களில் இருந்து மட்டுமே இது வரை கேட்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு முதல் பாடப்பகுதியின் உள்ளிருந்தும் கேள்விகள் கேட்கக்கூடும். வரலாற்று ஒப்பந்தங்கள், நபர்கள், இடங்கள், தேதிகள், ஆண்டுகள் போன்றற்றை குறிப்பெடுத்து நினைவில் வைத்துக்கொள்ளவும்.

பொருத்துக பகுதியிலும் புத்தகத்தில் உள்ள பயிற்சி வினாக்களில் இருந்து இட்டுமே இதுவரை நடந்துள்ள தேர்வுகளில் கேட்கப்பட்டுள்ளன. உள்ளிருந்து கேட்கப்படும் வினாக்களில் இடங்கள், நகரங்கள், நபர்கள், ஆண்டுகள், உடன்படிக்கைகள் போன்வற்றை குறிப்பெடுத்து நினைவில் வைத்துக் கொண்டால் முழு மதிப்பெண்கள் பெறலாம்.

## 2 மதிப்பெண்கள்

புவியியல் 3,4,5,6 பாடங்களும், பொருளியலில் இரண்டாம் பாடமும், குடிமையியலில் முதல் பாடத்திலும் உள்ள பகுதிகளில் எளிமையான வினாக்கள் அமைந்திருப்பதால் அவற்றை மட்டும் படித்தாலே முழு மதிப்பெண்கள் பெற வாய்ப்புள்ளது.

வரலாறு பாடப்பகுதியில் குறிப்பு வரைக, வரையறு, உடனடி காரணம், அங்கங்கள், யாவை, ஏன், போன்ற முடியும் வினாக்களை படித்தால் 4 வினாக்களை கண்டிப்பாக எழுதி 8 மதிப்பெண்கள் பெற முடியும்.

## வேறுபடுத்துக

புவியியல் பாடப்பகுதியில் 1,4,5,6,7 பாடங்களிலிருந்து வரும் வினாக்கள் எளிமையாக அமைந்திருப்பதால், அவற்றிலுள்ள அனைத்து வேறுபாடு வினாக்களும் படித்தால் முழு மதிப்பெண்கள் பெறலாம்.

## தலைப்பு வினா

வரலாற்றுப் பாடப்பகுதியில் 1,2,9,10 பாடங்களிலிருந்து வினாக்கள் அடிக்கடி கேட்கப்படுகின்றன. அவற்றில் உள்ள அனைத்து தலைப்பு வினாக்களை மட்டும் படித்தால் கேட்கப்படும் 4 வினாக்களில் 2 தலைப்பு வினாக்களுக்கு பதில் அளிக்கலாம்.

## 5 மதிப்பெண்கள்

ஐந்து மதிப்பெள்கள் பகுதியில் வரலாற்று பாடத்தில் காரணங்கள், விளைவுகள், பணிகள், முக்கியத்துவம், சாதனைகள் போன்ற குறிப்புகளைக் கொண்டு கேட்கப்படும் வினாக்களை தேர்ந்தெடுத்தால் போதுமானது. விடையில் ஆண்டுகள், இடங்கள், ஏன், முடிவு போன்றவற்றை மனதில் கொண்டு விடையளிக்கவும் குடிமையியல் பகுதியில் முதல் பாடத்தில் உள்ள இரு வினாக்களும், பொருளியல் பாடத்தில் இரண்டாம் பாடத்தில் உள்ள நான்கு வினாக்களும், புவியியல் பாடத்தில் காடுகள், மழை நீர் சேகரிப்பு, இயற்கை வள பாதுகாப்பு, மண்வளம், வேளாண்மை பிரச்சனை, இமய மலை, அமில மழை, நச்சுப் புகை போன்ற பகுதிகளிலிருந்து அதிக மதிப்பெண்கள் பெறலாம். புவியியல் பாடத்தில் (8,9) கடைசி இரண்டு பாடத்தில் இருந்து கட்டாயம் ஒரு வினா கேட்கப்படும்.

## காலக்கோடு

வரலாற்றுப் பாடப்பகுதியில் ஐந்து நிகழ்வுகளை ஆண்டுகளுடன் நிகழ்ந்த குறிப்புகளை காலக்கோட்டில் குறிந்து ஐந்து மதிப்பெண்கள் பெறலாம்.

1885-1919, 1900-1920, 1920-1940, 1930-1950, 1910-1930 போன்ற பகுதியில் ஐந்து குறிப்புகளை ஆண்டுகளோடு மீண்டும் மீண்டும் எழுதிப்பார்க்க வேண்டும். இவற்றிற்கு எளிமையான ஏழு குறிப்புகளை நினைவில் கொண்டால் எந்தப் பகுதிக்கும் ஐந்து நிகழ்வுகளை எழுதிவிடலாம். அவை வருமாறு.

1. 1905 - வங்கப்பிரிவினை, 1911- வங்கப் பிரிவினை நீக்கம்
2. 1914 - முதல் உலகப்போர் துவக்கம், 1918- முதல் உலகப்போர் முடிவு
3. 1920 - ஒத்துழையாமை இயக்கம் தொடக்கம், 1922 - ஒத்துழையாமை இயக்கம் கைவிடல்
4. 1927 - சைமன் குழு அமைத்தல், 1928-சைமன் குழு இந்தியா வருகை
5. 1930 - முதல் வட்ட மேசை மாநாடு, 1931-இரண்டாம் வட்ட மேசை மாநாடு, 1932 - மூன்றாம் வட்ட மேசை மாநாடு
6. 1939 - இரண்டாம் உலகப் போர் துவக்கம், 1945-இரண்டாம் உலகப்போர் முடிவு
7. 1947 - இந்தியா விடுதலை, 1950 - இந்தியா குடியரசாதல்

### வரலாறு வரைபடம்

ஆசியா, ஐரோப்பா அல்லது இந்தியா வரைபடத்தில் ஏதேனும் ஒரு வினாவைத் தேர்ந்தெடுத்துக் கொடுக்கப்பட்டுள்ள ஐந்து இடங்களை உரிய வரைபடத்தில் குறித்தால் ஐந்து மதிப்பெண்களைப் பெறலாம்.

**ஆசியா** வரைபடத்தில் அரேபியா, பர்மா, பசிபிக் பெருங்கடல், மங்கோலியா, செங்கடல், சீனா, மஞ்சூரியா, துருக்கி, பிலிப்பைன்ஸ், பாரசீக வளைகுடா போன்ற பகுதிகளை அதன் பகுதியில் எழுதியும், ஹாங்காங், பெங்ஜிங், சிங்கப்பூர், நான்கிங், காண்டன், ஷாங்காய் போன்ற பகுதிகளை புள்ளி வைத்து குறிக்க வேண்டும். பார்மோசா, கொரியா, சாகலின் தீவுகள், ஜப்பான் போன்ற பகுதிகளை நிழலிட்டு குறிப்பது முழு மதிப்பெண் பெற வாய்ப்பாக அமையும்.

**ஐரோப்பா** வரைபடத்தில் ரஷ்யா, ஜெர்மனி, பிரான்ஸ், இங்கிலாந்து, அயர்லாந்து, போர்ச்சுக்கல், ஸ்பெயின், டார்டெனல்ஸ், மர்ன் ஆறு, பாரீஸ், லண்டன், மாஸ்கோ, வெர்செய்ல்ஸ், டாகர் பாக்ங், வட கடல், அட்லாண்டிக் பெருங்கடல், ஜூட்லாந்து, டான்சிக், நார்வே,

கிரீஸ், கருங்கடல், டானின்பெர்க் போன்ற பகுதிகளை நினைவில் கொள்ளவும்.

**இந்தியா** வரைபடத்தில் 1857 புரட்சி நடைபெற்ற (ஜான்சி, கான்பூர், மீரட், லக்னோ, டெல்லி, பராக்பூர்) இடங்களும், விடுதலைப் போராட்ட நிகழ்வுகள் நடைபெற்ற (வேலூர், வேதாரண்யம், சௌரி சௌரா, ஹைதராபாத், ஜூனாகத், அமர்தசரஸ், தண்டி, காஷ்மீர், பூனா, பாண்டிச்சேரி, தூத்துக்குடி) இடங்களையும் பயிற்சி செய்ய வேண்டும்.

## புவியியல் வரைபடம்

இந்தியா வரைபடத்தில்

**மலைகள்** - இமயமலை, ஆரவல்லி மலை, மேற்கு தொடர்ச்சி மலை, விந்தியா-சாத்புரா மலைகள்,

**ஆறுகள்** - சிந்து, கங்கை, பிரம்ம புத்திரா, நர்மதை, தபதி, மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா, காவிரி, வைகை

**பீடபூமிகள்** - தக்காணம், மாளவம், சோட்டா நாகபுரி

**கடற்கரைச் சமவெளிகள்** - கிழக்கு கடற்கறை, மேற்கு கடற்கரை, சோழ மண்டலம், வட சர்க்கார், கொங்கன் கடற்கரை, மலபார் கடற்கரை

**வளைகுடா** - மன்னார் வளைகுடா, காம்பே வளைகுடா, கட்ச் வளைகுடா, ரான் ஆப் கட்ச், பாக் நீர்சந்தி

**காடுகள்** - சுந்வரவனம்(சதுப்புநிலம், மாங்குரோவ்), மலைக்காடுகள், பாலைவனத் தாவரம்

**மண் வகைகள்** - வண்டல், கரிசல், செம்மண், மலைமண், பாலைவன மண் வேளாண் பயிர்கள் - நெல், கரும்பு, கோதுமை,

**பணப்பயிர்** - ரப்பர், காபி, தேயிலை, சணல், பருத்தி

**மென்பொருள்** - சென்னை, மும்பை, டெல்லி, கொல்கத்தா

**இரும்புத் தொழிலகம்** - சேலம், பத்ராவதி, ஜாம்ஷெட்பூர், நெய்வேலி துறைமுகம் - காண்டலா, கோவா, திருவனந்தபுரம், கொச்சி, மங்களூர், மசூலிப்பட்டிணம், பாரதீப்

**தீவுகள்** - அந்தமான் நிகோபார் தீவுகள், லட்சத் தீவுகள்

**காற்று வீசும் திசை** - வட கிழக்கு - தென்மேற்கு பருவக்காற்று வீசும் திசைகள்

**மழை பெறும் பகுதி** - 50 செ.மீக்கு குறைவாக - 300 செ.மீக்கு அதிகமாக மழைப் பெறும் பகுதி

**பாலைவனம்** - தார் பாலைவனம்

**சிகரங்கள்** - எவரெஸ்ட், கே2, குருசிகார், மகேந்திரகிரி, போன்ற பகுதிகளை நன்கு பயிற்சி செய்தால் முழு மதிப்பெண்கள் கிடைக்கும்.

**போக்குவரத்து** வினாக்களை தவிர்ப்பது நல்லது. ஏனெனில் உதாரணமாக சென்னை-கொல்கத்தா ரயில் பாதை வினாவில், சென்னை, கொல்கத்தா, ரயில் பாதை ஆகிய மூன்றும் சரியாக குறித்தால்தான் ஒரு மதிப்பெண் பெற முடியும். ஏதேனும் ஒரு இடம் தவறானால் ஒரு மதிப்பெண்ணை இழக்க நேரிடும். எளிமையான பகுதிகளை மட்டும் பென்சிலில் குறித்தும், நிழலிட்டும், அம்பு குறியிட்டும், புள்ளி வைத்தும், பேனாவில் எழுதவும். நன்கு தெரிந்தால் ஒன்று அல்லது இரண்டு பகுதிகளை அதிகமாகக்கூட எழுதினால் 15 வினாக்களில் 10 மதிப்பெண்கள் கிடைக்கும்.

## 100க்கு 100 பெற

சரியான விடைப் பகுதியில் ஏதேனும் ஒரு விடை பகுதியை மட்டும் எழுதவும்.

பொருத்துக பகுதியில் வினாவும் விடையும் நேராக எழுதவும்.

இரண்டு மதிப்பெண் வினாவிற்கு கண்டிப்பாக கேள்விக்கு தகுந்த விடையை 2 முதல் 6 குறிப்புகளை எழுதினால் நல்ல மதிப்பெண்களை பெறலாம்.

வேறுபாடு பகுதியில் அட்டவணைப்படுத்தி 2 முதல் 4 குறிப்புகளை ஒரு பக்க அளவில் விடை அளிப்பது நல்ல மதிப்பெண்ணை அள்ளித்தரும்.

தலைப்பு வினா பகுதியில் தலைப்பு எழுதி விடையை மட்டும் எழுதினால் போதுமானது.

5 மதிப்பெண் பகுதியில் விடையை ஒரே பத்தியாக எழுதாமல் குறைந்தது 5 முதல் 7 தலைப்பின் கீழ் பத்தியிட்டால் முழு மதிப்பெண்கள் பெற ஏதுவாக இருக்கும். முக்கிய குறிப்புளை அடிகோடிடுவது சாலச்சிறந்தது.

வினாக்களைப் பக்கம் பக்கமாக எழுதுவது மதிப்பெண் தராது. தெளிவான விடைதான் மதிப்பெண்களைத் தரும். அரசு பொதுத் தேர்வு விடைக் குறிப்புகள் போதுமானவை. பொதுத் தேர்விற்கா அரசு தேர்வு இயக்ககம் வெளியிடும் அரசு விடைத்தாள் குறிப்பேட்டின்படிதான் விடைத்தாள் மதிப்பீடு செய்யப்படும் என்பதை மாணவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

எனவே 100 மதிப்பெண்கள் பெற எளிய வழி புத்தகத்தைப் பின்பற்றுவதுதான். எளிய வடிவில் தெளிவாக, குறித்த அளவில் எழுதப்படும் விடைக்கே, முழு மதிப்பெண்கள் கிடைக்கும். நன்கு பயிற்சி செய்தால் 100 மதிப்பெண்களை எளிதாகப் பெறலாம்.

### தேர்ச்சி அடைய

காலக்கோடு 5 மதிப்பெண்கள், புவியியல் வரைபடம் 10 மதிப்பெண்கள், ஆசியா வரைபடம் 5 மதிப்பெண்கள், குடிமையியல் 7 (5+2) மதிப்பெண்கள், பொருளியல் 7 (5+2) மதிப்பெண்கள், வேறுபாடு 8 மதிப்பெண்கள், புவியியல் இரு மதிப்பெண் வினாவில் 8 மதிப்பெண்கள் இவற்றை தயார் செய்தாலே ஏறத்தாழ 50 மதிப்பெண்கள் கிடைத்துவிடும்.

முந்தைய பொதுத்தேர்வு வினாத்தாள்களை சேகரித்து எழுதிப் பயிற்சி எடுத்துப் பாருங்கள், மாணவர்கள் நினைத்து முடியாதது ஒன்று உண்டோ?

மாணவர்கள் அனைவரும் தேர்ச்சி பெறவும், 100 மதிப்பெண்கள் பெறவும் வாழ்த்துக்கள்.

நன்றி  தி ஹிந்து நாளிதழ்